Subscription.
Inland: Rs. 50/- year
For Advertisement
Apply to:
The Manager,
'The Morning Star,'
182, First Cross Street
JAFFNA.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q / J / 104 / News / 89
Established: 1841: A Christian Weekly: Published Every Friday
Vol. 149 Jaffna, Friday, 21 JULY 1989 No. 29
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

News and Articles in Tamil and English. Please send them to
THE EDITOR,
'The Morning Star,'
182, First Cross Street,
JAFFNA.

## JUBILARIAN FELICITATED.

A service of thanksgiving for twenty five years of teaching service to Jaffna College by Mr. S. Balachandran was conducted in the Cathedral Church Vaddukoddai at 8.45 a.m on Wednesday the 12th July. The service was led by the Rev. A. Jeyakumaran. The Rev. K. P. Govindaraj in his message said that Mr. Balachandran and the students and teachers of Jaffna College must be ever grateful to God for His mercies. A formal act of thanksgiving will not be sufficient; the entire body, mind and soul should turn towards Him in humble adoration. The service was followed by a fellowship tea at which over two hundred and fifty people participated.

The round table of Jaffna College felicitated their new Jubilarian at a complementary lunch on the same day. Dr. S. Jebanesan the Principal and Mr. W. D. Kulathungam the Vice Principal and Mr. S. J. Manickam spoke the honesty, intergrity and perseverance of Mr. Balachandran. Mr. Balachandran replied.

## DIVINE JUSTICE.

1. The mills of God grind slowly,
But they grind exceeding fine;
That's what the "Sri Lanka story"
Always brings to my mind.
When we break the Lord's commandments
We bring down His wrath on our heads;
Though we may escape the world's judgement,
"VENGEANCE IS MINE" thy Lord has said.

2. We were once a happy nation
Of Sinhalese, Tamil, Muslim and Burghers;
We worked hand in hand for our freedom;
We thought ourselves - sisters and brothers,
Till Satan sowed discord among us;
The Sinhalese wanted to rule and suppress
They started a series of discriminations
Which caused all other races distress.

3. The first to fall victim was the Burgher,
Who left the Island without a murmur
He went down to Australia to settle,
Where now he is doing very well,
While those who drove him are going down hill,
Well on their way to Hell.
Since the 1983 carnage they now seem to find
Their old way of life has gone with the wind.

4. They then turned their attention on the Tamils,
The Indians they deprived of their vote;
Now, forty years after Independence
The Indians are holding them by their throats.
To cut down the Ceylon Tamil's power
They decreed the official language - Sinhala,
To deny Tamils higher education,
They introduced their notorious standardisation.

5. They kept our boys out of universities
Hence most left the Island for higher studies
Though scattered world over like the Jews
They brought credit to the countries they did choose.
Those who stayed behind had no choice
But to see that the world, heard their voice
Their lives they've sacrificed in the fight
To keep their honour and regain their right.

6. The universities they reserved for their boys
Have turned into hotbeds of violence and vice.
The youth stand out and hopefully gaze;
But the 'Varsity doors are slammed in their face,
Even the young ones are denied education
But forced to take part in political demonstration,
Their little lives are also in danger:
It's the work of the dogs in the manger.

7. They sent their troops North with bombs and guns
Given licence to kill and burn - house and barn
Killing and burning they did their job well
But the brave Tamil spirit they just couldn't quell.
Now see what a mess they have made of the South
Their sons perfecting what they practised up North.
The very guns used against the Tamil unrest
Are now turned against them - pointing at their breast.

8. Oh God! How many more "plagues" have you to send?
Before they open their eyes and being to mend;
There are still some in our country who are just playing ball
Who can't even see the writing on the wall,
Who will tell them that deliverence is at hand
Who will tell them of your promise that still stands
*"If my people shall humble themselves and seek my face- I will heal their land."*
(2 Chronicles Ch: 7 verse 14)

## Jaffna College: New Primary School Complex.

On the 27th June Mr. Edward Marks Charge - D-Affairs of the U. S. Embassy in Colombo laid the foundation stone for the new primary School Complex of Jaffna College, Mr. Edward Marks came to Jaffna College to participate in the two hundreth anniversary celebrations of Dr. Daniel Poor's birth. After the speeches made by the Principal Dr. S. Jebanesan and Mr. Edward Marks, the Bishop the Rt. Rev. D. J. Ambalavanar offered the prayers.

The new building will have three stories and will be constructed between the Principal's Bungalow and the Vaddukoddai —Sithankerny Road.

(continued)
## "WOULD A SHIFTING WIND

During the past five years of hibernation, Jaffna Central had been awaiting a change of heart on the part of st. Johns to accomodate the former on the latter's grounds. St. John's appeared to have been reluctant, and on one occasion suggested a neutral venue. Jaffna Central turned down this offer for very valid reasons which I shall endeavour to enumerate and enlighten in the paragraph to follow.

From its inception, the schools concerned in the BATTLE OF THE NORTH alternately hosted the BIG EVENT, year after year. If St. Johns had been the venue of the match in 1960, Jaffna Central's maidan was the venue in 1961. In the year 1965, the BATTLE OF THE NORTH, the 67th in the series, was played at st. Johns when Mr. K. Pooranampillai was the Head of st. Johns and the late Mr. E. Sabalingam was the Principal of Jaffna Central. The writer vividly remembers the glorious 8 wicket victory scored by st. Johns in that BIG ENCOUNTER under the captainship of P. Kanagadurai. The late Donald Ganeshakumar led the Jaffna Central team that year. It was during that year (1965) that Mr. K. Pooranampillai prevailed upon Mr. E. Sabalingam to play all the BIG MATCHES thereafter on Jaffna Central grounds, and that each school would alternately take up the responsibility of organising the BIG EVENT. Mr. E. Sabalingam, the Sportsman that he was, readily agreed to the proposal, and thereafter from 1966 till 1984, the BATTLE OF THE NORTH was played on Jaffna Central grounds. Had Mr. Sabalingam not consented to the proposal then, the BIG MATCH would have followed the normal traditional pattern. The present dilemma wouldn't then have arisen.

moreover, when St. Johh's expressed fear and concern to accomodate such a vast crowd on their comparatively small field after 1965, Jaffna Central ungrudgingly came to their rescue to play the BIG MATCH thereafter from 1966 — 1984 on their (Jaffna Central's) home stretch. It was a sad irony of fate that in 1985, 1986 and 1987 when Jaffna Central maidan was a veritable mess where no man dared enter, that St. John's failed to come to Central's rescue to play the BIG MATCH on the former's (St. Johns) grounds. There wasn't a change of heart, and no goodwill seemed to prevail. As a result, the BATTLE OF THE NORTH had been pushed into that frustrating BELT OF DOLDRUMS for the past five years.

One good turn deserves another. But the magnanimous gesture on the part of Central way back in 1965 hasn't still been reciprocated. One fears whether it is sliding towards a permanent impairment to the high and noble traditions built over the years.

"BETTER TIMES" do prevail now. If not, how Could the BATTLE OF THE GOLDS have been revived this year? With regard to the BATTLE OF THE NORTH, it is only a change of heart on the part of the two School Heads that could revive this SOCIAL EVENT. Would a shifting wind or a strong Current help the Schools out of this impasse — I mean the DOLDRUMS.

## WANTED

An experienced Accounts clerk to maintain accounts in English with a sound knowledge of Accounts and Book-keeping. Retired persons too will be considered.

Food on payment and lodging will be provided for ladies.

*Apply to:*
The Warden,
Karuna Nilayam,
Kilinochchi.

# உதய தாரகை

## UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ். வெள்ளிதோறும் வெளிவருவது

நீதி ஜனத்தை உயர்த்தும் : பாவம் எந்தக்குலத்துக்கும் இழிவாம்

மலர் 149 21 - 07 - 1989 [இதழ் 29

14 - 7 - 89 இதழின் தொடர்ச்சி.

## சிந்தனை 23.

**அழிவின் பாதையில்** செல்லும் மக்களை மீட்கவே மீட்கப்பட்ட மக்களாகிய இஸ்ரவேலரைப் பயன்படுத்தினர். இவர்கள் இறைவனின் களப்பணியாட்களாக இருந்தார்கள். இவர்களுடைய பணி, அனைத்து மக்களும் இறைமக்கள் என்ற கண்ணோட்டத்திலேயே நடைபெறுதல் வேண்டும். இப்பணியின் முதலாவது பயணிதான் யோனா. மேற்கூறிய இறைத்திட்டத்திற்கு முதலடியை எடுத்துத் தந்து, அகில உலக இறைக்கோட்பாட்டை அமைத்துத் தந்தவர் ஆமோஸ். அனைவரும் இறைவனின் அழைப்பின் பங்காளிகள் என்று கூறும் வலுவான சிந்தையை ஆமோஸ் 9; 7 கூறுகின்றது.

"நான் இஸ்ரவேலை எகிப்து தேசத்திலிருந்தும், பெலிஸ்தியரைக் கப்தோரிலிருந்தும், சீரியரைக் கீரிலிருந்தும் கொண்டுவரவில்லையோ?"

எனவே இறைவன் இஸ்ரவேலருடையவர் மட்டுமல்ல அனைத்துலகிற்கும் உரியவர். ஆகவே உலகம் அனைத்தையும் மீட்பது இறைவனுடைய திட்டம். ஆகையினால் இறைவன் நினிவே மக்களுக்காகக் கவலைப்பட்டார்.

இன்று புதிய இஸ்ரவேலராகிய திருச்சபை, கிறிஸ்துவின் சிலுவை மரணத்திலும் உயிர்த்தெழுதலாலும், பாவ இருளில் இருந்து மீட்டு எடுக்கப்பட்ட கூட்டமாய் இருக்கின்றது. மீட்கப்பட்ட கூட்டத்தைப் பற்றிப் பவுலடிகளார் கூறும்போது.

"முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள். இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்." (எபே 5: 8)

வெளிச்சத்தின் பிள்ளைகளாகிய நாம் அனேகரை வெளிச்சத்திற்குள் கொண்டு வரவேண்டியவர்கள். இருள் இருக்கும் இடம் எல்லாம், வெளிச்சத்தின் பிள்ளைகள் செல்ல வேண்டும் என்பதே புதிய இஸ்ரவேலின் தலைவராகிய கிறிஸ்துவின் விருப்பம். கிறிஸ்து, ஒரு கூட்டம் மக்களுக்காக அல்ல, அகில உலகிற்குமாகவே செயல்பட்டார்.

அகில உலகமும் மீட்கப்பட வேண்டும் என்பது இறைத்திட்டம். பங்குபங்காகவும் வகைவகையாகவும் தீர்க்கர்கள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றிய தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினர், (எபிரே 1: 1 - 2)

இத் திட்டம்நிறைவேறவே கிறிஸ்து, "அனுப்புகிறேன்" என்ற சொற்தொடரைப் பயன்படுத்துகின்றார். (மத் 10: 16) நாமும் நமது பணிகளும் தேங்கிக் கிடக்கும் நீர்த்தேக்கங்களாக இருக்கும்வரை மீட்பின்பணி முழுமை அடைவது அரிது.

நியாயத் தீர்ப்பு நாள் வரும்போது,எல்லா மக்களும் மீட்கப்பட வேண்டும். அழிவின் பாதையில் இருந்து பிறரை மீட்பது. மீட்கப்பட்டோரின் பொறுப்பு. இதற்காகவே உன்னை அழைத்தேன் என்று கூறுவதையே யோனா 1: 2 ஆம் வசனம் வலியுறுத்துகின்றது.

இறைவன் அழிவைக்கண்டு வேதனைப்படுபவர். மனித இனத்தை விட்டுத் தூரமாக இருப்பவருமல்ல. நமது நடுவில் இருப்பவர் என்று செப்பனியா 3: 17ம் வசனம் கூறுகின்றது. மனித இனத்தின் நடுவில் இருப்பவர் — அழிவில் இருந்து மீட்பவர், மீட்பின் கருவிகளாகத் தமது அன்புக் குரியவர்களை உபயோகிப்பார். இந்த உண்மையை ஏசாயா 6: 8 இலும் காண முடிகின்றது. மக்களை அழிவிலிருந்து மீட்கும் பணி யோனாவிடம் தரப்பட்டதுபோல ஏசாயாவிடம் விடப்பட்டது போல நம்மையும் எதிர்நோக்கி வந்துகொண்டிருக்கின்றது. என்ன பதில் சொல்லப்போகிறோம்?

இதோ! அடியேன் இருக்கிறேன் என்னை அனுப்பும் என்போமா? இன்றேல் யோனாவைப் போல் தர்ஷீசுக்குக் கப்பலேறப் போகிறோமா?

முதியோரே, குடும்பத்தினரே, இளைஞர்களே, மீட்பின் பணிக்கான அழைப்பு இறைவனின் பணிமனையில் இருந்து வந்துகொண்டே இருக்கின்றது.

துறை ஊரான்

வண. ஆ. வே. இயேசுதாசன்.

❀ ❀ ❀ ❀ ❀

14 - 7 - 89 இதழின் தொடர்ச்சி.

### கன்னித் தமிழை....

கன்னித் தமிழைக் கண்ணேபோல் காத்திட்ட கத்தோலிக்கர் மத்தியில் தமிழர் பண்பாட்டுடன் தொடர்புடைய ஒருசில பழக்க வழக்கங்களும் நடைமுறைகளும் சிக்கல்களை எழுப்பின. காரணம், அவைகள் சைவசமயத்துடன் இணைக்கப்பட்டு சமய விளக்கங்கள் அளிக்கப்பட்டு வந்ததுதான். தமது மதத்தின் கொள்கைகளை எள்ளளவும் விட்டுக்கொடுக்க விரும்பாத கத்தோலிக்க மக்கள், தமிழ் மக்களுக்கு, தமிழ் மக்கள் என்ற மட்டில் பல தனிப்பட்ட சிறப்பான பழக்கவழக்க நடைமுறைகளும் இருக்க முடியும் என்பதை ஏற்கத் தயங்கினர்.

1962ம் ஆண்டு நடைபெறத் தொடங்கிய இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் விளைவாக,கத்தோலிக்கர், தமக்கும் தமது பழம் பெரும் பண்பாட்டிற்கும் இருக்கும் உறவை- இருக்கவேண்டிய உறவை மீண்டும் ஆய்வு செய்யத் தொடங்கினர், அதன் விளைவாக, கத்தோலிக்கத் தமிழர்களின் வழிபாட்டில் மறு மலர்ச்சி ஏற்பட்டது. தமிழ் மரபிற்கு ஏற்ப வழிபாட்டு அடையாளங்கள் அமைக்கப்பட்டன. வழிபாட்டுப் பாடல்களின் மொழியிலும் இசையிலும் தமிழ் கமழத் தொடங்கியது. தைப் பொங்கல் போன்ற தமிழர் திருவிழாக்கள் கத்தோலிக்கராலும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டன.

கடந்த இருபதாண்டு காலத்திலும் ஈழத்துக் கத்தோலிக்க மக்கள் கருத்தரங்குகளையும் பட்டிமன்றங்களையும் நடத்தி, தமிழர் பண்பாட்டிற்கும் தமக்கும் உள்ள உறவை ஆய்வு செய்து வந்துள்ளனர். நாட்டின் சூழ்நிலை காரணமாய் நலிந்து போயிருந்த இத்தகைய ஆய்வரங்குகள் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளன.

## சீழ் தீர்த்த குறள்.

சித்தலைச் சாத்தனார் என்ற பழந் தமிழ்ப்புலவர் பாட்டு எழுதும்போது ஏதேனும் தப்பு ஏற்பட்டால் தன் தலையிலே எழுத்தாணியாலே குத்துவார். அப்படிக் குத்திக்குத்தி அவருடைய தலை முழுவதும் சீழ் வடியும் புண் ஏற்பட்டது. அதனாலேயே சித்தலைச் (சீழ் - தலை)சாத்தனார் என்ற பெயர் அவருக்கு ஏற்பட்டது.

இப்புலவர் சீழ்த்தலையுடன் திருக்குறள் அரங்கேற்றமாகிற சபைக்குப் போனார். வள்ளுவர் 1330 குறள்களையும் பாடி அரங்கேற்றம் செய்தபொழுது, மெய் மறந்து கேட்டிருந்தார். அவருடைய தலையில் இருந்த புண்ணெல்லாம் சுத்தமாக ஆறிக் குணமாகிவிட்டன.

❀ ❀ ❀ ❀ ❀

உள்ளூர்ச் சபைகளின்......

14-7-89 இதழின் தொடர்ச்சி

உள்ளூர்ச் சபைகளின் பணித் திட்டங்கள் இந்த வகையில் அமைந்தால்தான் நற்செய்தியை உண்மையான நற்செய்தியாக அவை அறிவிக்க முடியும். உள்ளூர்ச் சூழலை ஆக்கபூர்வமாக மாற்றும் வகையில் நற்செய்தி வழங்கப்பட வேண்டும்.

கிறிஸ்தவர்கள் மற்றவர்களோடு சேர்ந்து நாட்டின் நலத்தை வளப்படுத்தும் வகையில், பணியாற்ற முற்படும்போது சமுதாய - பொருளாதார - அரசியல் துறைகளில் குறிப்பிடத்தகுந்த வளர்ச்சி ஏற்பட முடியும். நற்செய்தியின் ஆற்றல் எத்தகையது என்பதை இத்தகைய மாநில, மற்றும் நாடு தழுவிய அரசியல் சூழ்நிலைகளில் நாம் எடுத்துக்காட்ட வாய்ப்புள்ளன. அரசியல், தீங்கிழைக்கும் ஒன்றாகக் கருதும்போக்கு, கிறிஸ்தவர்கள் தங்களின் எல்லாச் சூழல்களிலும் பிறரோடு கலந்து வாழும் பேற்றினைச் சிதைத்துவிடுகிறது. கிறிஸ்தவர்கள் நாட்டு நலனுக்காகப் பிறரோடு கலந்து வாழ்தல் மற்றும் பணி புரிதல் ஆகியவை கிறிஸ்துநெறிக் கல்வித் திட்டத்தில் சிறப்பிக்கப்பட வேண்டும். சமுதாயத்தில், தீயசக்திகள் வலுப்பெற்றுச் சமுதாய வளர்ச்சியைத் தடுத்துவிடாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்வது திருச்சபையின் கடமையாகும். திருச்சபை,தன்னுடைய அமைப்பையும் தன்னைச் சார்ந்து இயங்கும் நிறுவனங்களையும், தலைமையேற்று இயங்குவோர் தம் போக்குகளையும் ஊன்றிக் கவனிக்கவேண்டும். காலாகாலமாக இருந்துவரும் சமுதாய அமைப்பில் திருப்தி காணமல், அவ்வமைப்பை மாற்றி அமைப்பதிலும், நீதியும் அமைதிநிலையும் நிலவுவதற்கான முயற்சிகள் எடுப்பதிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். திருச்சபை, பயணிகளின் கூட்டம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. சபை வாழ்விலும் நிறுவன நடப்புகளிலும் பயணிகளுக்குரிய கட்டுப்பாடுகளோடு பணிவடக்க நெறி ஏற்றவர்களாய் - இறையாட்சியில் முழு நாட்டம் கொண்டவர்களாய் நாம் இயங்கவேண்டும்.

திருச்சபையையும் - அதன் இறையியல் அமைப்புக்களையும் - அருட்பணி முறைமைகளையும் நாம் ஆழ்ந்து புரிந்துகொண்டு செயற்படவேண்டும்.

### III. பணி முறைமையில் ஒரு திருப்பம்.

உள்ளூர்ச் சமுதாயங்களின் தேவைகளிலும் அவைகள் எதிர்கொள்ளும் போராட்டங்களிலும் நம்முடைய உள்ளூர்ச் சபைகள் தங்கள் கவனத்தைத் திருப்பவேண்டும். உள்ளூர் மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களை ஒட்டியதாகவே நம் உள்ளூர்ச் சபைகளின் அருட்பணி அமைந்திடவேண்டும். தற்போது உள்ளூர்ச் சபை அளவிலும், குழுக்கள், பேரவைகள் அளவிலும் நம் திருச்சபை மக்கள், உள்ளூர்ச் சமுதாயங்களில் உள்ள போராட்டங்களைச் சிறிதளவேனும் மனதிற்கொள்ளாமல் இயங்கிவருவது வருத்தத்திற்குரியதாகும். ஏற்கனவே அமுலில் உள்ள சபையின் திட்டங்கள், ஓய்வுநாட் பள்ளிகள், இளைஞர் — பெண்கள் ஐக்கிய சங்கங்கள் ஆகியவற்றோடு புதிய ஆக்க நெறி சார்ந்த திட்டங்களும் உள்ளூர் அளவில் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் சபை, பேராயம், பேரவை, திருச்சபை ஒருமைப்பாடு ஆகிய அளவில் மனித வளமும் பிற வளங்களும் பரிமாறிக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும்.

ஒவ்வொரு உள்ளூர்ச் சபையும் மாதம் ஒரு முறை சிறப்புக் கூட்டம் ஒன்றை நடத்தவேண்டும். அக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில், உள்ளூர் மக்களின் வாழ்க்கையையொட்டிய பிரச்சினைகள் இடம்பெற வேண்டும். அவை திருச்சபை மக்கள் யாவராலும் விவாதிக்கப்பட வேண்டும்.

எடுத்துக்காட்டுக்கு ஒரு குறிப்பிட்ட திருச்சபையில் ஏழை எளியவர்க்கும், வயது முதிர்ந்தவர்க்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும் உணவு, உடை ஆகியவை வழங்குவதையொட்டிய நிகழ்ச்சி நிரல் இடம்பெறலாம், ஒவ்வொரு உள்ளூர்ச் சபையும் தன்னுடைய சூழலுக்கு ஏற்பவும் தன்னுடைய வளத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் வகையிலும் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படவேண்டி இருக்கும். பள்ளிப் படிப்பை நிறுத்திக்கொண்ட பெண்களுக்கு, தொழில் துறைப் பயிற்சிகள் வழங்கவேண்டிய அவசியம் சில கட்டங்களில் ஏற்படலாம்.அத்தத சிறுவர்களை ஒன்று கூட்டி உள்ளூர்த் திருச்சபை, பேராய அளவில் ஒன்றுகூட்டி அவர்களுக்கு உகந்த பயிற்சித் திட்டத்தை உருவாக்கலாம். ஒரு குடும்பத்தில் ஒருவர் நோயாளியாக இருக்கலாம். அவருக்கு உகந்த மருத்துவம் கிடைக்காமற் போகலாம். அத்தகைய சூழ்நிலையில் உள்ளூர்த் திருசசபை அவருக்கு மருத்துவ உதவி அளிப்பதற்காக நிதி வழங்க முன்வரலாம். இவ்வாறு வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு வகையான பயிற்சித் திட்டங்கள் தேவைப்படும். உள்ளூர்த் திருச்சபை வட்டம் மற்றும் பேராய அளவில் இயங்கும் குழுக்களை அணுகி இத்தகைய பயிற்சி முறைகளை அமுலுக்குக் கொண்டுவரலாம். இத்திட்டங்களையொட்டிய ஆக்கநெறி சார்ந்த நிகழ்ச்சி நிரல்கள் உள்ளூர்ச் சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றித்தரும் வகையில் அமைய வேண்டும். இத்தகைய பணித்திட்டம் ஒவ்வொரு பேராயத்திலும் இடம்பெற்றாக வேண்டும். ஏற்கனவே வழக்கிலிருக்கும் ஓய்வுநாட் பள்ளி, இளைஞர் குழுக்கள், பெண்கள் ஐக்கியம் ஆகியவை இத்தகைய சமுதாய நாட்டங்களைக் கொண்ட நிகழ்ச்சி நிரல்களோடு செயற்பட முன்வர வேண்டும்.

வளரும்.

❀ ❀ ❀ ❀ ❀

### முத்து மண்டபம்.

கண்டியை ஆண்ட கடைசித்தமிழ் மன்னன் இராஜசிங்கனின் நினைவாக தமிழ் நாட்டில் முத்து மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக, தமிழக முதல்வர் திரு. கருணாநிதி தெரிவித்தார். வேலூரில் இந்த முத்து மண்டபத்தை அமைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது.

**தாரகை ஒளி:-**

மனிதன் பார்வையில் தன்வழி நேர்மை;
இருதயம் நிறுத்துப் பார்ப்பவர் யெகோவா.
— நீதிமொழிகள். 21 : 02

# எங்கள் கருத்து

## மக்களின் கூக்குரல்!

மக்கள் தங்கள் பொது நலத்திற்காக ஒன்று பட்டு வாழவேண்டும் என்பதே இறைவனின் திருவுளச் சித்தமாகும். உண்மை, நேர்மை, பரிவு, ஏழைகளில் கரிசனை, துன்புறுவோர்க்கு உதவுதல், அந்நியரை உபசரித்தல், அகதிகளை ஆதரித்தல், சிறுபிள்ளைகளின் நலத்தில் அக்கறை காட்டல் போன்ற பலவும் இன்று நம்மிடம் எதிர்பார்க்கப் படும் செயல்களாகும். இன்று நம்மைச் சுற்றிக் கேட்கும் இன்றைய கூக்குரலின் பொருள் இதுவே!

சோதோமிலிருந்து பலத்த கூக்குரல் எழுந்தது. ஏன்? 'அகங்காரம், போசனப்பிரியம், சோம்பல் இவ்வளவுதானே! அவர்கள் ஏழைகளுக்கும் எளியவர்களுக்கும் உதவி செய்யவில்லை. அவர்கள் தங்களையே உயர்த்திக் கொண்டு, நமது முன்னிலையில் அருவருப்பான அக்கிரமங்களைச் செய்தார்கள்; அவற்றைக்கண்டு நாம் அவர்களைத் தொலைத்தோம்' (எசேக். 16: 49, 50) சோதோமின் அக்கிரமம் நமக்கோர் எச்சரிப்பு என்பதை அறிக!

நம் மக்களின் உண்மை நிலையைப் பார்வையிடவும், பரிசீலனை செய்யவும் உண்மையையறியவும் இறைவன் வருவார். அந்த நாளோ அக்கிரமக்காரருக்கு ஒரு பயங்கர நாளாகும். 'தமக்கு அஞ்சி நடப்போரிடம் ஆண்டவர் அன்புறவு கொண்டுள்ளார். (சங். 25 :14) இன்று நம்மக்களுக்கு இரண்டு பக்கத்தாலும் இடி! உரலுக்கு ஒரு பக்கத்தில் இடி, மத்தளத்திற்கு இரண்டு பக்கத்திலும் இடி! இதுதான் நம் மக்களின் இன்றைய பரிதாபநிலை.

அன்று சோதோமுக்காக ஆபிரகாம் மன்றாடினான். நீதி நெறி பிறழாது வாழ்வோர் பத்துப்பேர் இருந்தாலும் அவர்களின் பொருட்டு சோதோம் முழுவதையும் காப்பாற்றுவோம் என்பது கடவுளின் வாக்கு: தமிழ்ப் பகுதியில் இத்தகைய பத்துப் பேராகிலும் இருந்தால்?......

அத்தேனே பட்டணம் பல்கலை நிறைந்த ஓர் இடம். ஒரு நாள் நண்பகல் நேரம், அதன் தெருக்களில் ஒளியேற்றிய விளக்கு ஒன்றினை உயர்த்திப் பிடித்துக்கொண்டு வருகிறார் தத்துவஞானி டயோதனிஸ். காரணம், உண்மையுள்ள ஒரு மனிதனைக் கண்டுபிடிக்கவே.! நகரத்தில் உண்மையுள்ள மனிதனைக் காண்பது அத்தனை அரிதாயிருந்தது.

"எருசலேமின் தெருக்களில் இங்குமங்கும் ஓடிச் சுற்றித்தேடி உற்றுப் பாருங்கள்: அதன் பொதுவிடங்களில் தேடி, நீதியைக் கடைப்பிடித்து உண்மையைத் தேடுபவன் எவனாவது உண்டோ என்று பாருங்கள்: அவனை முன்னிட்டுப் பட்டணத்துக்கு மன்னிப்பு அளிப்போம். (எரேமி 5. 1) பூமியின் மறைவிடங்களிலும் வெளியிடங்களிலும் கொடுமை நிறைந்திருக்கிறதே" (சங். 74: 20)


இன்று நாம் வாழும் சூழ்நிலையை உற்று நோக்குங்கள். மனித உயிர் மலிவுப் பொருளாகி விட்டது. ஆணோ பெண்ணோ, வளர்ந்தவர்களோ, வாலிபர்களோ, சிறியவர்களோ, முதியவர்களோ, எல்லாரும் நினைத்தவுடன் சுடப்படுகிறார்களே! மனிதனுக்கு மதிப்புக் கொடாது, சுய இலாபத்திற்காக மனிதனைப் பயன்படுத்தும் தன்னலச் செயல்களைத் தான் நாம் காண்கிறோம்.

வேதனைக் குரல் பலவிடங்களில் எழுகின்றது. வேதனைத் தீவுகள் (Islands of Torture) என்னும் கருத்துடைய நூலொன்றை, பெயர் பெற்ற ரஷ்ய நாட்டு எழுத்தாளர் அலெக்சாண்டர் சோல்சோனிட்சைன் எழுதியுள்ளாரல்லவா? குபேர நாடாகிய அமெரிக்காவில் தோன்றிய மார்ட்டின் லூத்தர் கிங் எழுதினார்: "இந்தச் சமுகத்தில் நமக்குள்ள சொந்தமும் பந்தமும் என்ன? நமக்குரியது என்று நினைப்பதற்கு இந் நாட்டில் யாதுள்ளது? என்று இரண்டு கோடி மக்கள் கருதுவரேல், அந்தோ! அது நாட்டிற்கு எத்தனை பெரிய இழப்பு?"

இன்று நம் மக்களின் நிலை வேதனைக்குரியது. இவர்கள் நம்பிக்கையிழந்து விட்டார்கள். 'எங்கள் வேதனைக்குரலைக்' க் கேளீர் என்பது நம் மக்களின் முழக்கம்! இவர்களுக்கு விடுதலை இல்லையா? விமோசனமில்லையா? சிந்தித்துப் பாருங்கள்! இறைவனை வேண்டுங்கள்"

### திருமணம்:

அசோகன்



வசந்தி.

தெல்லிப்பளைச் சபையைச் சேர்ந்தவரும், வறுத்தலைவிளானில் வசிப்பவருமாகிய, திரு. ஏ. செகரத்தினசிங்கம் தம்பதிகளின் மூத்த புதல்வனும், சவூதி அரேபியாவில் மின்சார இலாகாவில் பணியாற்றிய வருமாகிய திருநிறை செல்வன் ஆ. அசோகனுக்கும், புனித யோவான் கல்லூரியின் முன்னாள் அதிபர், காலஞ்சென்ற திரு ச. ஆனந்தராஜன், திருநெல்வேலி வளாக வீதியில் அமைந்த புனித தோமா திருச்சபை மனையில் வசிக்கும் திருமதி பத்மா ஆனந்தராஜன் ஆகியோரின் மகள், திருநிறை செல்வி ஆ. வசந்திக்கும், இம் மாதம் முதலாம் திகதி (1-7-89) காலை 9 - 30 மணிக்கு, சுண்டுக்குளி யோவான் முழுக்குநர் தேவாலயத்தில் திருமணம் நிறைவேறியது.

சபைப் போதகர் அருள் திரு. ஜோ. சர்வானந்தன் அவர்களது தலைமையில், அருள்திரு. சி. ரி. றொபேர்ட்ஸ், அருள்திரு. சே. சத்தியன் கதிர்காமர் அவர்களின் உதவியுடன் திருமண ஆராதனை நடைபெற்றது. இவ்வாராதனையில், மணமக்கட்கான "திருமணப்பிரதிக்கனைப்" பகுதியை அருள்தி. டி. ஆர். அம்பலவாணர் நடத்தினார். வண. ஜோ. சர்வானந்தன் மணமக்களுக்கு அறிவுரை வழங்கினார்.

ஆராதனை முடிவில் அனைவர்க்கும் விருந்துபசரணை நடைபெற்றது.

### அமரர் அருட்திரு. மார்க்கண்டு தேவதாசன்.

காலம் சென்ற அருட்திரு. மார்க்கண்டு தேவதாசன் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர். குடும்பத்தில் மூத்த மகன். தனது இரண்டாவது வயதில் தாயை இழந்தார். தந்தை மறு மணம் செய்ததனால் மேலும் அவருக்கு நான்கு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் இருந்தனர். குடும்பத்தில் மூத்த மகனாகவும் ஏனைய சகோதரர்களின் அன்பான மூத்த சகோதரனாகவும் விளங்கினார்.

ஆரம்பத்தில் கல்மடு என்னும் இடத்தில் உப தபாற்கந்தோரின் பொறுப்பாளனாக அவர் கடமையாற்றினார். சில ஆண்டுகளின் பின், 1982ம் ஆண்டு இறையியல் மாணவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இரண்டாண்டுகள் அதற்கான பயிற்சியை மதுரையில் உள்ள அரசடி இறையியற் கல்லூரியில் பெற்றுக் கொண்டார். பின்னர் அராலி, ஏழாலை ஆகிய இடங்களில் போதகராகப் பணியாற்றினார். அராலியில் பணியாற்றியபோது குருவுக்குரிய அபிசேகங்களைப் பெற்றார். சில மாதங்களுக்கு முன் நோய்வாய்ப்பட்டு சத்திர சிகிச்சைக்குள்ளானார். சில மாதங்களின் பின் மீண்டும் நோய்வாய்ப்பட்டு இறந்தார்.

பணியின் காலத்தில், சிறந்த அயலவனாக அவர் பணியாற்றினார். நல்ல சமாரியன் தன்னை - தன் நேரத்தை - தன்பணத்தை - தன் வாகனத்தை அடுத்தவனுக்கு அர்ப்பணித்தான். அயலவனுக்குரிய அணிகலங்கள் என்ன என்பது இங்கு உவமையாக விளக்கப்பட்டது. உவமையில் விளக்கப்பட்ட அந்த நல்ல சமாரியன் போல இவரும் தன்னை - தன் நேரத்தை - தன் பணத்தை - தன் வாகனத்தை அடுத்தனுக்குக் கொடுத்து உதவினார். இதனால் பல உயிர்கள் காக்கப்பட்டன. அவர் நல்ல அயலவனாக - நல்ல ஆயனாக - நல்ல சுவிசேஷகனாகப் பணியாற்றினார்.

### பத்திரிகைத் தணிக்கை.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் அமுல் செய்யப்பட்டுள்ள பத்திரிகைத் தணிக்கைக்கு, திரு. ரி. எம். ஹுருள்ளே, திருமதி. வி. எம். எம். அபயரத்ன, திரு. ரி. எஸ். பெர்னன்டோ, கலாநிதி ஆ. கந்தையா ஆகியோரைக் கொண்ட குழுவொன்றை, ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா நியமித்துள்ளார். இதன்படி சகல பத்திரிகைகளும், உள்ளூர்ச் செய்தி ஸ்தாபனங்களும் வியாழக்கிழமை (7-7-89) முதல், தணிக்கைக் குழுவினருடாகவே பத்திரிகைச் செய்திகளை வெளியிட வேண்டும். வெளிநாட்டு நிருபர்களினால் இங்கிருந்து அனுப்பி வைக்கப்படும் செய்திகள் அனைத்தும், தணிக்கை செய்யப்பட்டுள்ளன. செய்தித் தணிக்கை சம்பந்தமான விதிகளை, மீறி நடக்கும் வெளிநாட்டு நிருபர்களின் விஸாக்கள் ரத்து செய்யப்படும் அவர்களும் உடனடியாக இங்கிருந்து வெளியேற்றப்படுவார்கள். சட்ட விதிகளை மீறத்தூண்டும் செய்திகள் — தலையங்கங்கள் — கேலிச் சித்திரங்கள் - புகைப்படங்கள் ஆகியவை பத்திரிகைகளில் இடம்பெறுவதும் தடைசெய்யப்பட்டுள்ளது என அரசு அறிவித்துள்ளது.

### கலைஞர் வைரமுத்துவின் மறைவு.

பிரபல கலைஞரும், வசந்த கான சபாவின் ஸ்தாபகரும், சிறந்த நாடக நடிகரும், பாடகருமாகிய நடிகமணி வி. வி. வைரமுத்து தனது 65வது வயதில் காலமானார். ஜூலை மாதம் 8ம் திகதி சனிக்கிழமை (08 - 07 - 89) அன்று, கொழும்பில் உள்ள பெரிய வைத்திய சாலையில் அவரின் உயிர் பிரிந்தது என்பதை மனவருத்தத்துடன் தெரிவிக்கிறோம்.

தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்காகக் கொழும்பிற்குச் சென்றிருந்த வேளையில் திடீரென சுகவீனம் உற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அன்னாரின் உயிர் இவ்வுலகை விட்டுப் பிரிந்தது. அவரின் பூதவுடல் மறைந்தாலும் புகழுடல் மறையாது. "சங்கீத கோவலன்" என்ற வானொலி நாடகத்தில்வரும் ஒரு மணிநேரக் கட்டம், அவர் கொழும்பிற்குச் சென்றிருந்தபோது பதிவாகிவிட்டது.

"அரிச்சந்திர மயான காண்டம்", "சந்திரமதி", "கோவலன் கண்ணகி" போன்ற இவரது வெற்றி நாடகங்கள், மக்களிடையே இவரது நடிப்புத்திறனை எடுத்துக்காட்டின. 2000க்கும் மேற்பட்ட தடவைகள் இலங்கையின் பல பாகங்களிலும் மேடையேறிய அரிச்சந்திர மயான காண்டம் என்ற இசை நாடகமே வி. விக்குப் பெரும் புகழை ஏற்படுத்திக்கொடுத்தது என்று சொன்னால் அது மிகையாகாது' வி. வியின் மயான காண்டத்தின் ஒரு பகுதிக்குத் திரைப்பட வடிவம் கொடுத்துச் சிறந்த முறையில் டைரக்ட் செய்து, தனது "நிர்மலா" திரைப்படத்தில் அதைப் புகுத்தி' இந்திய கலைஞர்களுக்கும் இவரது நடிப்பாற்றலை எடுத்துக்காட்டிய திறமை நவாலியூர் அருமைநாயகத்திற்கே உரிமையாகும்.

மணிவிழா கண்ட கலைஞர் வைரமுத்து சிறுவயதில் இருந்தே கலை உலகத்துள் புகுந்தவர். 11ம் திகதி செவ்வாய்க்கிழமை காங்கேசன்துறையிலுள்ள இவரது இல்லத்திலிருந்து நண்பகல் 1-30 மணிக்கு உற்றார். உறவினர், கலைஞர்கள், பெரியோர் புடைசூழ, இவரது பூதவுடல் தகனத்திற்காகக் குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. மாபெரும் கலைஞரை நாம் இழந்து விட்டோம். அவர் மறைந்தாலும் அவரது மயான காண்டத்தின் "யாரடி கள்ளி நீ" என்ற பாடல் அவரை நினைவு கூரும் - ஒவ்வொரு காதுகளிலும் ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

வாழ்க அவர் நாமம்!
வளர்க்க அவர் கலை

### 4, 72, 329 - வாகனங்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி 1977ம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த முதல், இதுவரை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சகல விதமான வாகனங்களினதும் தொகை 4 லட்சத்து 72 ஆயிரத்து 326 ஆகும். 1977ம் ஆண்டு ஜுலை 22ம் திகதிக்கும் 1989பெப்ரவரி13ம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் வாகனத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனத்தின் விபரங்களைப் பற்றிப் போக்குவரத்து அமைச்சர் திரு. விஜேபால மென்டிஸ் கூறுகிறார்.

2, 28, 710 - மோட்டார் சைக்கிள்களும், 79, 582 மோட்டார் கார்களும், 29, 251 பஸ் வண்டிகளும், 79, 593 லொறிகளும், 321 - அம்புலன்ஸ் வண்டிகளும், 64 - மரண ஊர்வல வண்டிகளும், 41, 065 - டிராக்டர்களும், 13, 725 - டிரோலர்களும் இறக்குமதி செய்யப்பட்டு உள்ளன.

## PRESS CENSORSHIP.

The Government has promulgated Press Censorship under the Emergency on 5-7-89. The censorship Will cover matters concerning the IPKF, Strikes, and JVP killings.

*Ascension*:

## 'Going up' to stay around.

Thank goodness in daily English we don't have to contend with the literal equivalent of the German *Himmelfahrt* — journey to heaven. "Ascension" is bad enough and Bishop John Robinson's introduction of the word ascendancy doesn't help all that much either. We remain stuck with our down-here and up-there.

Yet Ascension is in essence a feast of neither here nor there. My diary doesn't mention it any longer and we shall not have the day off for what has been (somewhat seathingly?) called that most Protestant of all Christian festivals.

There is nothing — or better perhaps, no one — to see or touch any more; nothing to put your finger on. Thomas was lucky! (John 20:27)

When you look closely at the two accounts of the Ascension, it seems that Luke either casually or deliberately fails to mention the actual word *heaven* in connection with Jesus. Our Lord was simply "taken up", "lifted up" (Acts 1:2-9) or "he parted from his disciples" (Luke 24:51).

Only a few manuscripts add "and was carried up onto heaven" to the words "he parted from them." It is only in relation to the disciples that Luke says that they were caught "gazing into heaven" (Acts 1:10).

But then, this is precisely where the trouble lies. It's disciples, human beings, who are unable to think in terms other than straight-up-and-down, no matter how sophisticated our view of the universe may have become.

We are caught with the inadequacy of our vocabulary and stifled by the limits of our imagination. It is hard truly to get away from the "God above, man below" concept, or to think of time as something more than a linear commodity. After all, our physical body reminds us that we can only be in one place at one time.

I often think that the Bible runs two layers of symbol: one high-falutin and the other earthy. This is illustrated rather clearly at the beginning of the gospels.

God becoming human is circumscribed with the drumroll of angels, a virgin birth, a star and magi. But the earthy strand of these same sequences is symbolized by human overcrowding, a makeshift shelter with the animals, a repressive establishment, the massacre of innocents and hitting the refugee road.

With Ascension, the top layer language of being lifted *up* and removed from human sight by a cloud, runs parallel with the disciples returning to Jerusalem, the familiar city.

All right then, if our picture language has to include the word heaven, we ought to pinch ourselves in the arm in order to realize what King Solomon said: "Heaven itself, the highest heaven, cannot contain thee" (2 Chron. 6:18)

In a sense, Christ has nowhere to go. As there was no room for him in the inn, so there is no room for him in heaven. We are given a glimpse of the cosmic Christ, the one who "is all, and is in all" (Col. 3:11).

It all makes me wonder whether the Ascension was, in fact, a real parting. It was much more a bringing together of earth and heaven. Jesus did not turn his back on his disciples; it was in the act of blessing that he "parted" from them.

A priest faces his congregation when he pronounces the benediction. And even if Jesus was saying "good-bye" (as may appear to be the case on the surface) the original, forgotten meaning of this parting greeting is still valid: "God be *with* you."

### Reminder of Exodus.

To the careful reader, the cloud that "removed" Jesus from sight will be a reminder of the Exodus days when it was a sign of the presence of God. Pentecost, with its fire, contains the same kind of reminder. Both festivals are marked by disciples standing with both feet on the familiar ground of their ongoing world.

To the casual observer the message to them may have sounded something like this: "You're on your own now, it's all yours", but to those who have an eye for the way things hang together, it will have sounded more like "I am with you always, to the end of time" (Matthew 28:20).

The apostle Paul had an inkling of the immensity of the resources of grace that were (and are) available to us who "in union with Christ have been raised up and enthroned with him in the heavenly realms" (Ephesians 2:6,7).

And all that while we keep our feet firmly planted on the ground!

But there is one thing in the Ascension story which I find hard to believe. Luke tells us that the disciples returned to Jerusalem *with great joy*. If he had said confused, or puzzled, it would have been more credible.

The only explanation I can think of is that Luke wrote this many years after the event, and that he deliberately wrote it into the story. If they were not actually filled with great joy, they jolly well ought to have been!

And so he links the end of his gospel with its beginning, when tidings of great joy were shared all around (Luke 2:10).

Christ's coming and going are each marked by great joy which shall be to all people. There is in the gospel a great deal of coming and going or, if we are to take our cue from John, much going and coming-in that order (John 14:28). And if there is no great joy among Christians, there jolly well ought to be, according to Luke.

As a hymnwriter, I have wrestled with this great feast, frustrated by the down-here, up-there language of traditional hymnody. While not wanting to throw the traditional out of the window, I should like to place the following text alongside it all:

Although our Lord has left us,
he leaves us not alone.
"Ascended into heaven",
he makes the earth his home.
He is alive and present
and makes us all akin:
in every human being
he walks the world again.

By going to the Father
he makes his choice for man.
In him who shaped the cosmos
humanity is one.
The candle is extinguished
and yet the Light remains:
he who enlightens people,
is in our midst and reigns!

*Fred Kaan.*

## White House Religion.

"Heavenly Father, we bow our heads and thank you for your love. Accept our thanks for the peace that yields this day and the shared faith that makes its continuance likely. Make us strong to do your work, willing to heed and hear your will, and write on our hearts these words: Use power to help people. For we are given power not to advance our own purposes, nor to make a great show in the world, nor a name. There is but one just use of power, and it is to serve people. Help us remember, and it is to serve people. Help us remember, Lord. Amen."

— A prayer offered by George Bush at the beginning of his inaugural speech, January 20, 1989.

Many evangelicals who once thought President George Bush's proclamations of faith may have been politically motivated are now warming to the notion of a genuinely Christian President. And as the Bush administration takes shape, many Christians will be watching closely to see how—or if—Bush's religious beliefs will affect his policy making.

"Never any doubt."

Bush never used to talk openly or easily about his religious beliefs. In an interview with CHRISTIANITY TODAY last fall, Bush said his faith "has been very personal." Yet, in the same interview, he asserted that "there was never any doubt that Jesus Christ was my Saviour and Lord" (CT, Sept. 16, 1988, p. 40).

While many politicians stop talking about their religion after they are elected, Bush has seemed to increase his public discussion of religious matters. On the day following his election, he told reporters he and his wife had gone to church that morning because "God's help is absolutely essential."

Similarly, during last month's inaugural events, the Bushes scheduled both private and public worship services, and Bush proclaimed the Sunday following his inauguration a national day of prayer. During his inaugural speech, Bush said that his first act as President would be a prayer (see above).

The Bushes have followed through with their stated intention to attend church every Sunday. The family, life-long Episcopalians, generally rotate worship at several Episcopal churches in the Washington area, but they have also visited other churches, including a black Baptist church. The Bushes have said they will not allow security precautions to hamper their worship pattern, and, indeed, Barbara Bush told one television interviewer that she believes one of her duties as First Lady is to "get my husband to church."

Billy Graham, who has been a close personal friend of the President and his family for more than 25 years, believes Bush's faith is "strong and genuine." Graham told CHRISTIANITY TODAY, "I've had prayer with him many times and discussed spiritual things with his whole family on a number of occasions."

Bush has included other Christians in the leadership of his administration. Vice-president Dan Quayle and his wife have regularly attended McLean Presbyterian Church in northern Virginia and are considered evangelicals. Mrs. Quayle has been part of a Bible-study along with Joanne Kemp, wife of Secretary of Housing and Urban Development Jack Kemp and Susan Baker, wife of Secretary of State James Baker. In addition to the Quayles, two Cabinet members, Kemp and Labor Secretary Elizabeth Hanford Dole, have been outspoken about their evangelical beliefs. ( to be continued... )

Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. Q/J/104/ News 89
Printed for the Jaffna Diocese of the Church of South India at America Ceylon Mission Press. 182, 1st, Cross Street Jaffna on Friday 21 JULY 198[illegible] and published by The Rev. THEVANESAN, 182, First Cross Street, Jaffna